# டீம் கத்தா போட்டி விதிகள்

1. போட்டி ஏற்பாடு செய்தல்
2. தண்டனைகள் -- டீமிற்கு மதிப்பெண் குறைக்கும் முறை
3. தண்டனைகள் -- டீமை தகுதி நீக்கம் செய்யும் முறை

# கத்தா விதிகள் - டீம்

## அத்தியாயம் 1 போட்டி ஏற்பாடு செய்தல்

1. ஒவ்வொரு டீமும், சுற்று ஆரம்பிக்கும் முன்னரே, தேர்ந்தெடுத்துள்ள கத்தாக்களை, ஸ்கோர் டேபிளில் தெரிவிக்க வேண்டும்.

2. ஒவ்வொரு டீமும், ஒவ்வொரு சுற்றிலும், வெவ்வேறு கத்தாக்களை செய்ய வேண்டும்.

3. டீம் மேட்ச் மூன்று பேர் கொண்ட டீம்களுக்கு இடையேயான போட்டியாக இருக்கும். ஒவ்வொரு டீமும் ஆண்கள் மட்டும் அல்லது பெண்கள் மட்டும் கொண்டதாக இருக்கும்.

4. டீம் கத்தாவில், டீமிலுள்ள மூன்று போட்டியாளர்களும், ஒரே திசையில், ரெஃப்ரியை நோக்கி கத்தா ஆரம்பிக்க வேண்டும்.

5. டீம் போட்டியாளர்கள், எல்லா வகையிலும் கத்தா செய்வதில் தங்களுக்குள்ள திறமையையும், ஒரே நேரத்தில் இணைந்து செயல்படும் தகுதியினையும் காண்பிக்கும் வகையில் செயல்பட வேண்டும்.

6. டீம் கத்தா செய்யும் போது, போட்டியாளர்கள் கத்தாவின் பெயரை கூறிய உடன், தாங்களே கத்தா செய்ய ஆரம்பிக்க வேண்டும். ரெஃப்ரி எந்தவிதமான ஒலியோ அல்லது சைகையோ எழுப்ப மாட்டார்.

7. ஒவ்வொரு டீமும், போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் அறிவிக்கின்ற உயரத்தில் இருக்க வேண்டும்.

8. ஒவ்வொரு போட்டியாளரும் ஒரே சேஃப்டி நூன்சாக்கு பள்ளி/கிளப்பை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

## குறிப்பு

தனிநபர் கத்தா போட்டியின் போது கடைபிடிக்கப்படும் கீழ்கண்ட விதிகள், டீம் போட்டிற்கும் பொருந்தும்.

கத்தா போட்டிகளம், அதிகாரப்பூர்வமான உடை, சேஃப்டி நூன்சாக்கு, சேஃப்டி நூன்சாக்கு பாஸ்புக், சேஃப்டி நூன்சாக்கு அளவுகள், கத்தாக்களின் அட்டவணை, ஜட்ஜிங் பேனல் (நீதிபதிகள் குழு), தீர்ப்பளிக்க தேவையான அளவைகள், போட்டியாளர்களுக்கான விதிகள், தண்டனைகள் - போட்டியாளருக்கு மதிப்பெண் குறைக்கும் முறை, தண்டனைகள் - போட்டியாளரை தகுதி நீக்கம் செய்யும் முறை, அதிகாரப்பூர்வமான ஆட்சேபனைகள்.

## அத்தியாயம் 2 தண்டனைகள் -- டீமிற்கு மதிப்பெண் குறைக்கும் முறை

1. டீம் கத்தா போட்டியில், போட்டியாளர்கள் எந்த கையில் இருந்து, சேஃப்டி நூன்சாக்கு, கத்தாவை ஆரம்பிக்கிறார்களோ, கத்தாவை முடிக்கும் போதும், சேஃப்டி நூன்சாக்கு அதே கையில் இருக்குமாறு கத்தாவை முடிக்க வேண்டும். ஒருவர் இந்த விதியை பின்பற்றவில்லை எனினும், டீமிற்கே மதிப்பெண் குறைக்கப்படும்.

2. டீம் கத்தா போட்டியில், போட்டியாளர், சேஃப்டி நூன்சாக்கு கிரிப், பிளாக், கேட்ச், சுவிங், பஞ்ச், ஸ்டைரைக், ஸ்பின், சாப், டைரக்ஷன், கண்பார்வை, ஸ்டான்ஸ், ரோல், சர்கிள், ப்லிப் போன்ற டெக்னிக்குகள் முறைப்படி, போட்டியாளர்களில் ஒருவரது சேஃப்டி நூன்சாக்கு கட்டுப்பாட்டில், இல்லாமல் இருந்தாலும் டீமிற்கே மதிப்பெண் குறைக்கப்படும்.

3. கீழ்க்கண்டவைகளுக்காகவும் மதிப்பெண் குறைக்கப்படும்.

    1. கத்தாவில் செய்ய வேண்டிய கேட்ச்சிற்கு பதிலாக வேறு கேட்ச்சை மாற்றி செய்தால்

    2. நேராக சேஃப்டி நூன்சாக்குவை பிடிப்பதற்கு பதில், உடலில் பட்டு சேஃப்டி நூன்சாக்குவை பிடித்தால்.

    3. முழுமையான மற்றும் முறையான சுவிங் செய்யாமல், அடுத்த டெக்னிக் செய்தால்.

    4. இரண்டு கைகளில், பிடித்து, சிங்கில் பஞ்ச் செய்யும் போது சேஃப்டி நூன்சாக்கானது, நேர்க்கோட்டில் இல்லாமல் இருந்தால். ( கயிறானது வளையாமல், விறைப்பாக இருக்க வேண்டும்)

    5. ஸ்டான்ஸ் சரியாக இல்லாமல் இருந்தால்.

4. டீம் கத்தா போட்டியில், ஒரே சமயத்தில், அனைவரும் வெளி சைகைகள் இல்லாமல் செய்வது கூடுதல் அனுகூலமாகும். டீம் கத்தா போட்டியில், கத்தா ஆரம்பிக்கும் போதோ அல்லது கத்தா முடிக்கும் போதோ ஆணையிடுதல், காலால் தரையில் தட்டுதல், சேஃப்டி நூன்சாக்கால் ஆடையின் மேல் தட்டுதல், தேவையில்லாமல் மூச்சுக்காற்றை இழுத்து விடல், இரண்டு சாக்குகளையும் ஒன்றோடு ஒன்று தட்டுதல், இவை எல்லாம் வெளிச்சைகைகளுக்கு உதாரணங்களாவதால், மதிப்பெண்கள் அளிக்கும் போது ஜட்ஜுகள் இவைகளை கவனத்தில் கொள்வர்.

## அத்தியாயம் 3 தண்டனைகள் -- டீமை தகுதி நீக்கம் செய்யும் முறை

1. ஒரு கத்தாவின் பெயரை கூறிவிட்டு, வேறொரு கத்தா செய்வது.

2. கத்தா செய்யும் போது, சேஃப்டி நூன்சாக்கானது, தரையை தொட்டாலோ அல்லது ஒரு போட்டியாளர் கையிலிருந்து, நழுவி வீசப்பட்டாலோ, அந்த டீமே தகுதி நீக்கம் செய்யப்படும்.

3. டீம் அறிவித்த கத்தாவில் உள்ள டெக்னிக்குளை (அசைவுகளை) செய்யாமல் அல்லது மற்றொரு கத்தாவில் உள்ள டெக்னிக்கை (அசைவுகளை) ஒரு போட்டியாளர் செய்தாலே, அந்த டீமே தகுதி நீக்கம் செய்யப்படும்.

4. டீம் அறிவித்த கத்தாவில் உள்ள இரண்டு அல்லது மூன்று டெக்னிக்குளை (அசைவுகளை) செய்யாமல் அல்லது மாற்றி செய்து கடைசியில் கத்தாவை ஒரு போட்டியாளர் செய்தாலே, அந்த டீமே தகுதி நீக்கம் செய்யப்படும்.

5. போட்டியின் போது, சேஃப்டி நூன்சாக்கு அதிகாரிகளையோ அல்லது போட்டியாளர்களையோ அல்லது சேஃப்டி நூன்சாக்கு கலையின் மரியாதையை குலைக்கும் வண்ணம் செய்யப்படும் எந்த செயலையும், ரெஃப்ரி பேனல் தண்டனைக்கு உட்படுத்தும். அம்மாதிரி நடத்தை உள்ள போட்டியாளரை ரெஃப்ரி பேனல் முடிவின்படி, தகுதி நீக்கம் செய்வர்.